5th July 1962]

சந்தனத் தொழிற்சாலே

* 132 கேள்வி.—திரு. எம். கமலநாதன்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி, ஹஞர், செங்கம் ஆகிய வட்டங்களில் கிடைக்கும் சந்தனக் கட்டைகளேக் கொண்டு ஒரு சந்தனத் தொழிற்சாலே நிறுவ உத்தேசமுண்டா?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: No, Sir.

திரு. ம. கமலநாதன்: சந்தனத் தொழிற்சாலேயொன்றை நிறுவ தற்போது உத்தேசம் இல்லே என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னுர்கள். அப்படியென்ருல், தற்போது அதற்கு வேண்டிய சந்தன மரங்கள் கிடைக்கவில்லே என்று அமைச்சர் அவர்கள் கருதுகிருரா? சந்தனத் தொழிற்சாலேயை அங்கே நிறுவ எத்தகைய சூழ்நிலே இருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கருதுகிருர்?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: சந்தனக் கட்டையாகவே ஏலம் போடுவதில் சர்க்காருக்கு நிறையப் பணம் வருவதால், சந்தனத் தைலம் எடுப்பதற்கான திட்டம் எதுவும் இல்லே என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: சமீபத்திலே ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சந்தனக் கட்டை களவு கண்டுபிடிக்கப்பட்டு அது வராந்தாவிலே போடப்பட்டிருந்து கெட்டுவிட்டது என்றெல்லாம் செய்தி வந்திருக்கிறதே, அதையெல்லாம் அரசாங்கம் கவனித்து ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் என்று கருதுகிறதா? அல்லது கருதிற்ரு?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: அம்மாதிரி திருட்டுப் போவதற்கு ஏது ஒன்றும் இல்லே. அப்படியே திருட்டுப் போவதென்ருலுங்கூட, ஏதோ சொற்பமாக இருக்கலாமே தவிர, கனம் அங்கத்தினர் சொல்லும்படியான வகையிலே எதுவும் இருக்காது.

மதுபான பர்மிட்டுகள்

* 133 கேள்வி.—திரு. டி. கர்ச்சா கவுடர்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா மதுவிலக்கு கமிட்டிகளில் மதுபான பர்மிட்டுகள் வைத்துள்ள நபர்கள் அங்கம் வகிக்கிருர்களா?

(இ) ஆம் என்ருல் எந்தெந்த ஜில்லாவில் எத்தனே எத்தனே பேர்கள்?

(உ) இவர்களை மேற்படி கமிட்டிகளில் தொடர்ந்து நீடிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN: (அ) & (இ) Only two members, one member in the District Prohibition Advisory Council, The Nilgiris and one member in the Madras City Prohibition Advisory Council are holding liquor permits.

(c) Yes. The two members are holding liquor permits on health grounds. Hence the holding of a liquor permit is not a disqualification for being a member of the District Prohibition Advisory Council.

திரு. டி. கர்ச்சா கவுடர்: மதுபான பர்மிட் வைத்துக்கொண்டு குடிப்பவர்களும் இந்த மதுவிலக்குக் கமிட்டிகளிலே அங்கத்தினர்களாக இருப்பதால் மதுவிலக்குக் குற்றங்களும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை ஆலோசனை செய்து, மதுபான பர்மிட் வைத்துக்கொண்டிருப்பவர்களை இந்தக் கமிட்டியிலிருந்து கூடிய விரைவில் நீக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: ஜில்லா போலீஸ் அதிகாரியையும், விற்பனை வரி அதிகாரியையும் கலந்துகொண்டு ஜில்லாக் கலெக்டர் இந்தக் கமிட்டியிலே அங்கத்தினர்களை நியமனம் செய்யவேண்டும் என்று ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவின் பிரகாரம் கலெக்டர்கள் நியமனம் பண்ணியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையையும் இனிமேல் பரிசீலனை செய்கிறோம்.

திரு. ஜே. மாதா கடவுர்: பர்மிட் வைத்துக்கொண்டு குடித்துக் கொண்டிருப்பவர்கள், தெருவிலே குடிக்கிறவர்களைப் பார்த்து, 'மதுபானம் செய்தால் கெட்டுப் போவீர்கள், ஆகவே குடிக்க வேண்டாம்' என்று புத்திமதி சொல்வதும், அந்த வகையில் பிரசாரம் செய்வதும் பொருத்தமானதல்ல. ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதை உடனடியாகப் பரிசீலனை செய்து, மதுவிலக்குக் கமிட்டிகளிலே மது குடிப்பவர்கள் இருக்கக்கூடாது என்ற முறையில், "டிஸ்க்வாலிபிகேஷன் சட்டம்" ஒன்று கொண்டு வருவாரா?

கனம் திரு. பூ. கக்கன்: 'ஹெல்த் க்ரௌண்ட்ஸ்' இலே பர்மிட் கொடுக்கிறார்கள். 'குடிக்காவிட்டால் ஆள் க்ளோஸ்' என்று சொல்கிறார்களே அப்படிப்பட்டவர்களுக்கு, டாக்டருடைய சர்ட்டிபிகேட்டின் பேரில் பர்மிட் கொடுக்கப்படுகிறது. பர்மிட் வைத்திருப்பவர்களுக்கும் ஏற்கனவே இக்கமிட்டிகளில் இடம் கொடுத்துவிட்டார்கள். இனிமேலாவது அப்படிப்பட்டவர்களை இக் கமிட்டிகளில் போடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

திரு. மா. இராசாங்கம்: அரசாங்கத்திடமிருந்து மதுபான பர்மிட்டுகள் கேட்கும் நபர்களின் எண்ணிக்கை வருடா வருடம் வளர்ந்துகொண்டே வருகிறதா? அல்லது குறைந்துகொண்டே போகிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

5th July 1962]

திரு. கி. இரா. சம்பந்தம்: மதுவிலக்குக் கமிட்டிகளில் சொல்லப்படும் யோசனைகள் எப்போதுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவா? ஏற்றுக்கொள்ளப்படாதிருந்தால், இனியாவது ஏற்றுக்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: ஆலோசனைகள் சொல்வதற்காகத்தான் கமிட்டிகள் அமைக்கப்படுகின்றன. நல்ல ஆலோசனைகளெல்லாம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: தலைவர் அவர்களே, மது விலக்கு ஆலோசனை கமிட்டிகளில் மது அருந்துபவர்கள் இருக்கக் கூடாது என்ற விதி அவசியம் இருக்கப்படவேண்டும். அந்த முறையில் விதிகளைத் திருத்தி உடனடியாக உத்தரவு போடப் படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: உடனடியாக உத்திரவு போடுவது ஒரு பிரச்னை அல்ல. ஏற்கனவே ஜில்லாதோறும் டெவலப்மென்ட் கவுன்சில் இருக்கிறது. சுகாதாரத்திற்கும் க்ஷேம நலத்திற்கும் ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியே இந்த வேலையையும் செய்துவிடலாமா என்பது பரிசிலனையில் இருக்கிறது.

குளித்தலையையும் முசிரியையும் இணைக்கப் பாலம் கட்டும் திட்டம்

* 134 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் (திரு. மு. கருணாநிதியின் சார்பாக): கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போக்குவரத்து வசதிக்காகவும் வாணிப வளர்ச்சிக்காகவும் குளித்தலையையும் முசிரியையும் இணைக்க பாலம் கட்டும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH: The bridge work across Cauvery to connect Kulithalai with Musiri is roughly estimated to cost Rs. 60 lakhs. It has not been possible to include this work in the Third Five-Year Plan in view of the limited funds allotted for road works and the huge cost involved for the proposed bridge work.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: பேட்டைவாய்த்தலையில் சர்க்கரை ஆலை இருக்கக்கூடிய காரணத்தினலே, கரும்பு உற்பத்திக்குச் சாதகமாக இருப்பதற்காகவும், அந்த ஆலையின் கரும்பு உற்பத்திப் பரப்பை விஸ்தரிப்பதற்காகவும் வேண்டி, கரும்பு செஸ் நிதியிலிருந்தாவது இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. வி. ராமைய்யா: இப்பொழுதிருக்கக்கூடிய நிதி நிலையில், அந்தப் பாலத்தை மூன்ருது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எடுத்துக்கொள்வது சாத்தியம் இல்லை. ஆனல், அடுத்து வரும் திட்டங்களைப் பரிசிலனை செய்யும்போது, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய கரும்பு ஆலையின் அவசியத்தை மனதிலே